1982 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சில பல துறைகளில் இதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்றும், உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது பற்றி தனிக் கேள்வி போட்டால், எந்தெந்தத் துறைகளால் எந்த அளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது? என்பதையும், குறிப்பாக இராணுவத்தினர் ஓட்டுநர் பயிற்சி பெற்றிருப்பார்களானால், அவர்களுக்கு போக்குவரத்துத் துறையிலே இடமளிக்க வேண்டும் என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதனுடைய முழு விவரங்களையும் தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்னாள் இராணுவத்திற்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள், முன்னுரிமைகள் சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கும், இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்படுகிறதா? இல்லையா? அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

(அ) சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் வருகிறது; வானொலியில் சொல்லப்படுகிறது. டெலிவிஷனில் வருவதில்லை. இந்த டெலிவிஷன் என்பது மத்திய அரசுக்குச் சொந்தமா? அதிலே இந்த நிகழ்ச்சியைக் காட்டுவதற்கு, நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாடாளுமன்றம் சட்டமன்றம் ஆகியவைகளின் நிகழ்ச்சிகள் காட்டப் படுவதில்லை; அவ்வாறு காட்டுவது சரியாக இருக்காது.